# கள்ளக்குறிச்சி நகராட்சி

2021ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 25 ம் தேதி வியாழக்கிழமை காலை 11.00 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரணக்கூட்ட நடவடிக்கைகள்.

**முன்னிலை.. திரு என்.குமரன், B.Sc.,**
**தனி அலுவலர் / ஆணையாளர்**

பொருள் எண் – 01

கள்ளக்குறிச்சி நகராட்சியில் வருவாய்பிரிவு, பொறியியல் பிரிவு மற்றும் பொதுசுகாதார பிரிவுகளில் பணிபுரிந்து வரும் கீழ்கண்ட பணியாளர்களுக்கு வாகனமுன்பணம் ரூ.1,00,000/– (ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) வீதம் வாகனமுன்பணம் வழங்க கோரியுள்ளனர்

| வ. எண் | பெயர் (திரு) | பதவி | வாகன முன்பணம் ரூ. |
|---|---|---|---|
| 1. | ஆர்.குமரன் | தூய்மை பணியாளர் | 50,000/– |
| 2 | ஆர்.ராமு | தூய்மை பணியாளர் | 50,000/– |
| | | மொத்தம் | 1,,0,000/– |

மேற்கண்ட பணியாளர்களுக்கு வாகனமுன்பணம் வழங்க கோரியுள்ளதை தொடர்ந்து தமிழ்நாடு அரசாணை எண் 467நிதித்துறை நாள் 22.09.2009 மற்றும் அரசு விதிகளின் படி இரண்டு சக்கர வாகனம் வழங்கரூ.1,00,000/–(ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்) வழங்கவும் மேற்படி முன்பண தொகையினை சம்மந்தப்பட்ட பணியாளர்களின் மாதந்திர ஊதியத்தில் அசல் தொகை மற்றும் வட்டியினை கணக்கீடு செய்து மாதாமாதம் பிடித்தம் செய்திடவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.1,00,000/–(ரூபாய் ஒரு இலட்சம் மட்டும்)க்கு மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.971 /2020 /சி1

பொருள் எண் – 02

கள்ளக்குறிச்சி நகராட்சியில் தூய்மை பணியாளராக பணிபுரிந்து வரும் திரு சுமன் என்பவர் தனது குடும்ப சூழ்நிலையின் காரணமாக வாணியம்பாடி நகராட்சிக்கு பணியிட மாறுதல் கோரி கொடுத்துள்ள விண்ணப்பம் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு–

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. சம்மந்தப்பட்ட தூய்மை பணியாளர் தன் விருப்பத்தின் பேரில் பணியிட மாறுதல் கோரி கொடுத்துள்ள விண்ணப்பத்தினை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களுக்கு பரிந்துரைக்காக அனுப்ப மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் சி1 / 770 / 2021)

பொருள் எண் –03

கள்ளக்குறிச்சி நகராட்சியில் LPG Crematorium துருகம் சாலையில் உள்ள மயானத்தில் 2011–2012ஆம் ஆண்டு கட்டப்பட்டுள்ளது. தற்பொழுது வரை இக்கட்டிடம் பயன்பாட்டில் உள்ளது. மேலும் தற்பொழுது வரை மேம்பாட்டு பணிகள் ஏதும் மேற்கொள்ளப்படவில்லை. இதனால் இதன் இயந்திரங்கள் மற்றும் exhaust chimny போன்றவை பழுதடைந்து எரியூட்டும் புகை சரியாக வெளியேறாமல் கட்டிடத்தில் உட்புறம் சூழ்ந்து கொள்ளும் நிலை உள்ளது. இதனால் அவ்விடத்தில் பணிபுரியும் பணியாளர்கள், பிரேதங்கள் எரியூட்டும் போது உருவாகும் புகை மயானத்திற்கு வரும் அனைவரும் மேற்படி புகையினை சுவாசிப்பதால் தொற்று

நோய்கள் ஏற்படும் என்பதாலும் சிரமப்படுகின்றனர்.

மேலும் இப்பணிகளை சரியாக பராமரிப்பது குறித்து மாசு கட்டுப்பாட்டு வாரியம் மூலம் வருடாந்திரம் concern to operate license பெறுவது இந்நகராட்சிக்கு முக்கிய பணியாகும்.எனவே, இக்கட்டிடத்தில் உள்ள இயந்திரங்கள், புகை போக்கிகள், மற்றும் இக்கட்டிடத்தினை வர்ணம் பூசி மின்சார பணிகள், விளக்குகள் அமைக்க தோராய மதிப்பீடு ரூ.8,50,000/–க்கு தயார் செய்யப்பட்டு செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் ஒப்புதலுக்காக வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு–

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியினை நகராட்சி நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் இ1 / 771 / 2021)

## பொருள் எண் –04

கள்ளக்குறிச்சி நகராட்சியில் தார்சாலைகள் 34.12 கி.மீ மற்றும் சிமெண்ட் சாலைகள் 19.18 கி.மீ மொத்தம் 53.30 கி.மீ உள்ளது. இச்சாலைகள் கடந்த நிவர் புயல் மற்றும் குடிநீர் குழாய் உடைப்பு சரிசெய்தல் போன்ற பணிகளால் ஆங்காங்கே பழுதடைந்துள்ளது. இதனால் வாகன ஓட்டிகளும், பொது மக்களும் மிகவும் பாதிக்கப்படுவதால் மேற்படி பழுதுகளை நீக்க தோண்டப்படும் பள்ளங்களினால் விபத்துகள் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே இச்சாலைகளில் சேதமடைந்த இடங்களை தார் ஒட்டுப்பணி (patchworks) மூலம் சீரமைக்க வேண்டிய பணி அவசியமாகின்றது. எனவே இப்பணிக்கு ரூ.9,00,000/– மதிப்பீடு தயார் செய்து பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு–

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணியினை செலவினத்தினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் இ1 / 772 / 2021)

## பொருள் எண் –05

கள்ளக்குறிச்சி நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளிலும் பயன்படாமல் உள்ள ஆழ்துளை கிணறுகள் உள்ளன. இவைகள் முற்றிலும் பயன்படுத்த இயலாமல் தண்ணீர் இன்றியும், பழுதடைந்தும் உள்ளன. எனவே, இவைகளை எதிர்வரும் காலங்களில் இந்த ஆழ்துளை கிணறுகளை மழைநீர் சேகரிப்பு அமைப்புகளாக மாற்றம் செய்யலாம். மேலும் இதற்காக ஆழ்துளை கிணறுகளை சிறு மாற்றம் செய்யவும், இதனை சுற்றிலும் தொட்டி போன்ற அமைப்புகளை கட்டி சிறு கற்கள் நிரப்பு அமைப்புகள் ஏற்படுத்த அவசியமாகிறது. எனவே மேற்படி ஆழ்துளை கிணறுகளை மழைநீர் சேகரிப்பு அமைப்பாக மாற்ற ஆகும் உத்தேச செலவினம் ரூ.4,00,000/–க்கு மன்றத்தின் ஒப்புதலுக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு–

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி பணிகளை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் இ1 / 773 / 2021)

பொருள் எண் –06

கள்ளக்குறிச்சி நகராட்சி அலுவலகத்தில் உள்ள அறைகள் மற்றும் வெளிப்புறங்களில் அமைக்கப்பட்டுள்ள LED விளக்குகள் பழுதடைந்துள்ளது. மேலும் நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையம் சுற்றிலும் அதிக திறன் கொண்ட LED விளக்குகள் முற்றிலும் பழுதடைந்துள்ளது. இதனால் இரவு நேரங்களில் பேருந்து நிலையம் முற்றிலும் இருள் சூழ்ந்து காணப்படுகிறது. எனவே, பேருந்து நிலையத்தில் உள்ள LED lights மற்றும் நகராட்சி அலுவலகத்தின் உட்புறம், வெளிப்புறங்கள், குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் அமைந்துள்ள இடங்களில் அமைக்கப்பட்டுள்ள விளக்குகளை புதியதாக மாற்றி அமைக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.3,60,000/–க்கு பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு–

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர, அவசியம் கருதியும்,பொது மக்களின் நலன் கருதியும் பழுதடைந்துள்ள விளக்குகளை புதியதாக மாற்ற ஆகும் செலவினத்தினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் இ1 / 774 / 2021)

பொருள் எண் –07

நகராட்சியின் பொது சுகாதார பிரிவில் தேவையான ரெடிமிக்ஸ் மருந்து சப்ளை செய்யும் பணிக்கு பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி குறைந்த ஒப்பந்தப்புள்ளிகள் 25.02.2021 அன்று கோரப்பட்டதில் பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | ரெடிமிக்ஸ் மருந்து ஒரு லிட்டர் தொகை ரூ. | மதிப்பீடு |
|---|---|---|---|
| 1. | M/s Shivam Traders, Mogappair, Chennai | 800.00 | குறைவு |
| 2 | M/s Thirumurugan Traders, Namakkal | 850.00 | அதிகம் |

**அலுவலகக் குறிப்பு**

1. மேற்கண்ட 2 ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள M/s Shivam Traders, Mogappair, Chennai என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளினை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
2. இச்செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 775/2021 /எச்1)

## பொருள் எண் – 08

கள்ளக்குறிச்சி நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் வாகன எண் TN 15 P 3168 என்ற வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை நீக்கம் செய்யும் பணிக்கு பொது சுகாதார பணியின் அவசர அவசியம் கருதி குறைந்த விலைப்புள்ளிகள் **11.02.2021** அன்று கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | விபரம் | கிரீன் மோட்டார்ஸ், துருகம் மெயின்ரோடு, கள்ளக்குறிச்சி | ஓம் முருகா எஸ்.கே. மோட்டார்ஸ், ஏமப்பேர், கள்ளக்குறிச்சி | திரு சந்தோஷ் எஸ்.வி.டி. மோட்டார்ஸ், கள்ளக்குறிச்சி |
|---|---|---|---|---|
| 1. | நகராட்சி பொது சுகாதார பிரிவில் இயங்கும் வாகன எண் TN 15 P 3168 என்ற வாகனத்தில் ஏற்பட்டுள்ள பழுதுகளை நீக்கம் செய்யும் பணிக்கு | **77600** | **78000** | **73950** |

**அலுவலகக் குறிப்பு**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட 3 விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு சந்தோஷ், எஸ்.வி.டி மோட்டார்ஸ், கள்ளக்குறிச்சி என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. இச்செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 776 /2021 /எச்1)

## பொருள் எண்– 09

கள்ளக்குறிச்சி நகராட்சியில் வருவாய் மற்றும் குடிநீர் நிதி 2020–2021ஆம் ஆண்டிற்கு கீழ்க்காணும் பணிகள் மேற்கொள்வதற்கு 18.02.2021 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விபரத்தினை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை |
|---|---|---|---|---|
| 1 | நகராட்சிக்கு சொந்தமான சமுதாய கழிவறைகளை மராமத்து பணிகள் செய்தல் | ரூ.9,00,000 | திரு பி.நடராஜன் கள்ளக்குறிச்சி | 0.27% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | திரு டி.எம். இளங்கோ கள்ளக்குறிச்சி | 1.27% மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 2 | நகராட்சி பகுதிகளில் குடிநீர் விநியோக பிரதான மற்றும் பகிர்மான குழாய்களில் ஏற்படும் பழுதுகளை சரி செய்தல் | ரூ.6,00,000/– | திரு ஏ.சின்னதுரை கள்ளக்குறிச்சி | 0.30% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | திரு ஜே.முஸ்தபா, கள்ளக்குறிச்சி | 4.87% மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 3 | நகராட்சியில் விடுபட்டுள்ள மற்றும் விரிவாக்க பகுதிகளுக்கு மின் விளக்குகள் கொள்முதல் செய்தல் | ரூ.8,00,000/– | M/s J.K.டிரேடர்ஸ் கள்ளக்குறிச்சி | 0.19% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | M/s ஸ்ரீ கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கள்ளக்குறிச்சி | 1.30% மதிப்பீட்டிற்கும் அதிகம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | வஉசி நகர் 1வது தெருரு சித்தேரி தெரு, அழகர் நகர் சாலை சந்திப்பு மற்றும் பிள்ளையார் கோவில் அருகில் மழைநீர் வடிகால் கட்டுதல் (வார்டு எண் 02,15,20,21) | ரூ.6,00,000/– | திரு என்.கணேசன், கள்ளக்குறிச்சி | 0.16% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | M/s ஸ்ரீ கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கள்ளக்குறிச்சி | 1.05% மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 5 | ராஜா நகர் மற்றும் கச்சேரி ரிாலை மேல் நிலை நீர்த்தேக்க தொட்டிகளை மராமத்து பணி செய்தல் | ரூ.6,65,000// | திரு டி.எம்.இளங்கோ, கள்ளக்குறிச்சி | 0.14% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | திரு பி.நடராஜன், கள்ளக்குறிச்சி | 2.35% மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 6 | துருகம் சாலை மயானத்தில் திடக் கழிவு மேலாண்மை பணிக்கு ஷெட் அமைத்தல் | ரூ.2,50,000/– | திரு ஜே.முஸ்தபா, கள்ளக்குறிச்சி | 0.37% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | திரு ஏ.சின்னதுரை, கள்ளக்குறிச்சி | 0.64% மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 7 | நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 01 முதல் 07 வரையுள்ள பகுதிகளில் அமைந்துள்ள சிறுமின் விசைப் பம்புகள், விசைப் பம்புகள் பழுது நீக்கம் / உபகரணங்கள் கொள்முதல் செய்தல் | ரூ.9,95,000 | திரு எம்.மோகன், கள்ளக்குறிச்சி | 0.13% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | M/s J.P.கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கள்ளக்குறிச்சி | 1.29% மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 8 | நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 18 முதல் 14 வரையுள்ள பகுதிகளில் அமைந்துள்ள சிறுமின் விசைப் பம்புகள், விசைப் பம்புகள் பழுது நீக்கம் / உபகரணங்கள் கொள்முதல் செய்தல் | ரூ.9,95,000/– | M/s ஸ்ரீ கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், கள்ளக்குறிச்சி | 0.57% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | திரு என்.கணேசன், கள்ளக்குறிச்சி | 2.00% மதிப்பீட்டிற்கும் அதிகம் |
| 9 | நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 15 முதல் 21 வரையுள்ள பகுதிகளில் அமைந்துள்ள சிறுமின் விசைப் பம்புகள், விசைப் பம்புகள் பழுது நீக்கம் / உபகரணங்கள் கொள்முதல் செய்தல் | ரூ.9,95,000/– | திரு என்.செங்கோட்டையன், கள்ளக்குறிச்சி | 0.21% மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | திரு ஏ.சின்னதுரை கள்ளக்குறிச்சி | 2.40% மதிப்பீட்டிற்கும் அதிகம் |

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர்களின் ஒப்பந்தப்புள்ளிகளை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.
3. பட்டியல்களின்படி தொகையினை நகராட்சி வருவாய் / குடிநீர் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் 2883/2020/இ1)

## பொருள் எண்– 10

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண் 01இல் உள்ள திரு.வி.க. தெருவில் சுமார் 50க்கும் மேற்பட்ட வீடுகள் உள்ளன. இச்சாலை தற்போது மண் சாலையாக உள்ளதால் இச்சாலையினை பயன்படுத்தி கடக்கும் பொது மக்கள் மிகவும் சிரமப்படுகின்றனர். மேலும், இச்சாலையில் வாகனங்கள் செல்ல இயலாமல் மேடு, பள்ளங்கள் அதிக அளவில் உள்ளதால் வாகனங்கள் செல்ல இயலாமல், அவசர ஊர்திகள் கூட எளிதில் செல்ல இயலாத நிலை உள்ளது. எனவே, இவ்வழித்தடத்தினை சிமெண்ட் சாலையாக அமைக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.9,00,000/–க்கு பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி பணியினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் 777 /2021/இ1)

## பொருள் எண்–11

கள்ளக்குறிச்சி நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 02இல் 6வது குறுக்கு தெருவில் உள்ள குறுக்கு வீதியில் சுமார் 30க்கும் மேற்பட்ட வீடுகள் உள்ளன. இவர்கள் பயன்படுத்தும் சாலையானது முற்றிலும் மண் சாலையாக உள்ளதால், மழைக்காலங்களில் பொது மக்கள் இவ்விடத்தினை கடந்து செல்ல மிகவும் சிரப்படுகின்றனர். மேலும் இச்சாலையில் வாகனங்கள் செல்ல இயலாத நிலை உள்ளதால், அவசர ஊர்திகள் கூட எளிதில் செல்ல இயலாமல் உள்ளது. எனவே இச்சாலை நேரில் ஆய்வு செய்யப்பட்டு சிமெண்ட் சாலையாக மாற்ற ரூ.4,00,000/– மதிப்பீட்டில் பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி மண் சாலையினை சிமெண்ட் சாலையாக மாற்ற ஆகும் செலவனத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் 778 /2021/இ1)

## பொருள் எண் –12

நகராட்சி அலுவலக வளாகத்தில் உள்ளே MCC கட்டிடம் அருகே BOV Shed அமைந்துள்ளது. இக்கட்டிடங்களில் சுற்றி அமைந்துள்ள சுற்றுச்சுவர் சரியான பாதுகாப்பின்றி உள்ளது இதனால் பிற பகுதிகளிலிருந்து வெளியாட்கள் உள்புறம் வந்து வாகனங்களின் உதிரி பாகங்களை சேதப்படுத்துவது போன்ற செயல்களில் ஈடுபடுகின்றனர். இதனை தடுக்கவும் மற்றும் பிற 2 எண்கள் MCC களில் முறையான பணிகளை கண்காணிக்கவும் அவசியமாகிறது. எனவே தடுப்பு சுவரினை மேம்படுத்தி முள் வேலி அமைக்கவும் கூடுதலாக கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தவும் ஆகும் ரூ.3,80,000/–இல் பணிகளை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் பணியின் அவசர, அவசியம் கருதி பணியினை மேற்கொள்ள ஆகும் செலவினத்தினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் 779 /2021/இ1)

## பொருள் எண் –13

கள்ளக்குறிச்சி நகராட்சியில் மொத்தம் சேகரமாகும் மக்கும் குப்பைகளை நுண் உரமாக்கும் முறையில் உரமாக்கும் பொருட்டு 3 எண்கள் Micro Compost centre உள்ளன. இவற்றில் முதன்மை பணியாக வீடுகளிலிருந்து சேகரிக்கப்படும் குப்பைகளை அரைத்து நுண் துகள்களாக மாற்றும் அரவை இயந்திரம் தற்போது பழுதடைந்துள்ளது. இதனால் தினமும் சேகரமாகும் மற்றும் உலர்த்தப்பட்ட குப்பைகளை அரைக்க இயலாமல் உள்ளது. எனவே இந்த மோட்டார்களை சரி செய்யவும், பிளேடுகளை சரி செய்யவும், அல்லது புதியதாக மாற்றவும் அவசியமாகிறது. எனவே இப்பணியினை மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.1.00,000/– க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்காணும் பணியினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண் 780 /2021/இ1)

## பொருள் எண் –14

நகராட்சி எல்லைக்குட்பட்ட க.மாமனந்தல் சாலையில் உள்ள குறுக்கு தெருவிற்கு செல்லும் சாலையின் சந்திப்பில் உள்ள சிறுபாலம் பழுதடைந்துள்ளது. இதனால் மழைநீர் மற்றும் கழிவுநீர் இப்பகுதியினை கடந்து செல்லாமல் ஒருபுறம் முழுவதும் தேங்கியுள்ளது. இதனால் இப்பகுதி சுகாதார சீர்கேடு ஏற்படும் அபாயம் உள்ளது. மேலும் தேங்கியுள்ள கழிவுநீர் சாலையில் தேங்கி தார்சாலை முழுவதும் சேதமடைய வாய்ப்புள்ளது. எனவே இச்சந்திப்பில் சேதமடைந்துள்ள சிறு பாலத்தினை சரி செய்து புதியதாக சிறுபாலம் அமைக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,00,000/–இல் பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியினை மேற்கொள்ள ஆகும் செலவினத்தினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண் 781/2021/இ1)

## பொருள் எண் –15

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட் 21 வார்டுகளிலும் 5213 மின் கம்பங்கள் உள்ளன. இவற்றில் நகராட்சி மூலம் 1901 எண்கள் தெரு மின் விளக்குகள் பராமரிக்கப்பட்டு வருகிறது. மேலும் நகராட்சிகளில் பல இடங்களில் மின் இணைப்புகள் இன்றியும், மின் விளக்குகள் இன்றியும் உள்ளன. மேலும் தற்போது தெருமின் விளக்கு பராமரிப்பு பணிகள் Outsourcing / operation and maintenance மூலம் தனியரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. எனவே நகராட்சிக்குட்பட்ட பகுதியில் அமைக்கப்பட்டுள்ள தெரு மின் விளக்குகளை ஒழுங்குமுறைபடுத்த மின் கம்பங்களில் வார்டு எண் , மின் இணைப்பு எண், தெருமின் விளக்கு கம்ப எண் போன்ற விபரங்களை மின் கம்பங்களில் வர்ணத்தின் (பெயிண்டிங்) மூலம் குறிக்க வேண்டிய அவசியமாகிறது. இப்பணிகளில் நகராட்சியின் (Service Connection) இணைப்புகள் பற்றிய விபரம், தேவையற்ற இணைப்புகள் விபரம் போன்ற விபரங்களுடன் மின்சார ஒழுங்குமுறையும் அடங்கியுள்ளது. எனவே, இப்பணிக்கு தோராயமாக ஒரு எண்ணுக்கு ரூ.50 வீதம் மொத்தம் ரூ.1,00,000/–ஆகும் செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இப்பணியானது மிகவும் அத்தியாவசிய பணி என்பதால், பணியினை மேற்கொள்ள ஆகும் செலவினத்தினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண் 782 / 2021 / இ1)

## பொருள் எண் –16

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு சொந்தமான துருகம் சாலையில் உள்ள மயானத்தினை சுற்றி அமைக்கப்பட்டுள்ள சுற்றுச்சுவர் சரியான அளவில் இல்லாமல் உள்ள காரணத்தினால், இப்பகுதியினை சுற்றி உள்ள வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களில் உருவாகும் குப்பைகளை கொண்டு கொட்டி வருவதாலும், கல்லரைகள் கட்டி இட நெருக்கடியினை மேற்கொள்வதை தடுக்கும் பொருட்டும் இதன் வடக்கு பகுதியில் சுற்றுச்சுவர் கட்ட வேண்டிய அவசியம் ஏற்படுகிறது. எனவே, மயானத்தினை சுற்றி சுற்றுச்சுவர் அமைக்க ஆகும் செலவினம் ரூ.9,80,000/–ல் பணியினை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. இப்பணியானது மிகவும் அத்தியாவசிய பணி என்பதால், பணியினை மேற்கொள்ள ஆகும் செலவினத்தினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண் 783 / 2021 / இ1)

## பொருள் எண் –17

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு, **CORPORATE ENVIRONMENTAL RESPONSIBILITY (CER)** நிதியின் கீழ், கீழ்க்காணும் பணி மேற்கொள்வதற்கு 25.02.2021 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விபரத்தினை மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின்பெயர் | மதிப்பீடு தொகை ரூ. | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை |
|---|---|---|---|---|
| 1. | Supply, Erection and Commissioning fo 14 Nos.LED Center Media Double Side Street Light Arrangements at Kallakurichi Municipality | ரூ. 10,00,000/- | M/s. P & B ENTERPRISES, Erode | ரூ. 8,70,627/- 0.29 % மதிப்பீட்டிற்கும் குறைவு |
| | | | M/s. J.P. CONSTRUCTIONS, Namakkal | ரூ. 9,19,927/- 5.35 % மதிப்பீட்டிற்கும் அதிகம் |

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்காணும் ஒப்பந்தப்புள்ளிகளில், 0.29% மதிப்பீட்டைவிட குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள M/s. P & B ENTERPRISES, Erode என்ற நிறுவனத்தாரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி பணிக்கான தொகையினை CORPORATE ENVIRONMENTAL RESPONSIBILITY (CER) நிதியின் கீழ் வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண். 784 / 2021 / இ1 )**

## பொருள் எண்–18

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் எதிர்வரும் பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மழைக்காலங்களில் மின்தடை ஏற்படும் சமயங்களில் பொதுமக்களுக்கு தங்குதடையின்றி குடிநீர் விநியோகம் செய்திடும் வகையில், இந்நகராட்சிக்கு சொந்தமான க.மாமனந்தல் ஏரி மற்றும் ஏமப்பேர் ஏரியில் உள்ள திறந்தவெளி கிணற்று நீரினை மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளுக்கு நீரேற்றம் செய்வதற்கும், மழைக்காலங்களில் தாழ்வான பகுதிகளில் தேங்கியுள்ள மழைநீரினை வெளியேற்றம் செய்வதற்கும் மற்றும் புயல் சமயத்தில் சாலையோரம் சாய்ந்துள்ள மரங்களை வெட்டி அப்புறப்படுத்துவதற்கும் தேவையான ஜெனரேட்டர், டீசல் இன்ஜின் மற்றும் மரம் அறுக்கும் இயந்திரங்கள் வாடகை அடிப்படையில் வாங்குவதற்கு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் **1920**, விதி–**15**ன் கீழ் பணிகள் மேற்கொள்ள ரூ. **1,50,000/–** (ரூபாய் ஒரு இலட்சத்து ஐம்பாதாயிரம் மட்டும்)–க்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டு, தற்போது பட்டியல் தொகை ரூ. **1,46,160/–** (ரூபாய் ஒரு இலட்சத்து நாற்பத்தி ஆறாயிரத்து நூற்று அறுபது மட்டும்)–ஐ நகராட்சி வருவாய் நிதியிலிருந்து ஒப்பந்ததாரர் **திரு. ஏ.சின்னதுரை**, கள்ளக்குறிச்சி என்பவருக்கு வழங்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

மன்றம் அங்கீகரிக்கலாம்.

**( ந.க.எண். 2505 / 2020 / இ1 )**

## பொருள் எண் –19

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். **14**, ஏமப்பேர் சேலம் பிரதான சாலையில் சர்வே எண். 77/2A, 77/2A3Bல் அமைந்துள்ள வெற்றிவேல் நகரில் சுமார் **50**–க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றனர். மேற்படி பகுதியில் தெருமின் விளக்குகள் இல்லாமல் உள்ளது. மேற்படி பகுதிகளில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் மூலமாக ஏன்கனவே மின் கம்பங்கள் அமைக்கப்பட்டுள்ளது. மேற்படி, **14** எண்ணிக்கை மின் கம்பங்களில் புதியதாக தெருமின் விளக்குகள் அமைப்பதற்கு ஏற்ப தெருமின் விளக்கு ஒயர்கள் அமைக்க தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திடம் **23.10.2020** அன்று கடிதம் அனுப்பியதில், மேற்படி பகுதியில் புதியதாக தெருமின் விளக்குகள் அமைப்பதற்கு ஏற்ப ஒயர்கள் அமைப்பதற்கு, இளநிலை பொறியாளர், தெற்கு பிரிவு, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம், கள்ளக்குறிச்சி அவர்களின் பதிவு எண். **5561220722** நாள். **04.02.2021**ல் மதிப்பீடு தொகை ரூ. **77,585/–** (ரூபாய் எழுபத்தி ஏழாயிரத்து ஐநூற்று என்பத்தி ஐந்து மட்டும்) செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. மேற்படி தொகையினை தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. மன்றம் அனமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண். 2505 / 2020 / இ1 )**

## பொருள் எண் 20

கள்ளக்குறிச்சி நகராட்சிக்குச் சொந்தமான தினசரி நாளங்காடியில் அமைந்துள்ள அம்மா உணவகத்தில் உள்ள சமையல் பாத்திரங்கள், புகை போக்கி, ஸ்டீமர் மற்றும் இதர தளவாட உபகரணங்கள் பழுதடைந்துள்ளதால், மேற்படி அம்மா உணவகத்தினை செயல்படுத்துவது மிகவும் சிரமமாக உள்ளது. எனவே, மேற்படி அம்மா உணவகத்தில் பழுதடைந்துள்ள உபகரணங்களை கொள்முதல் செய்திடவும், பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளவும் ஆகும் உத்தேச மதிப்பீடு தொகை ரூ. **3,00,000/–** (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்)க்கு மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண். 785 / 2021 / இ1 )**

## பொருள் எண் 21

கள்ளக்குறிச்சி நகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து வார்டு பகுதிகளிலும் 281 எண்ணிக்கையில் சிறுமின் விசைப்பம்புகள் அமைந்துள்ளன. மேற்படி சிறுமின் விசைப்பம்புகளின் ஆழ்துளை கிணறுகளின் நீர்மட்டம் குறைந்தும், மேலும் பழுதடைந்து உபயோகப்படுத்த இயலாத நிலையில் பயனற்ற நிலையில் உள்ள ஆழ்துளை கிணறுகளை நிரந்தரமாக மூடி, அந்த ஆழ்துளை கிணறுகளில் உள்ள சிறுமின் விசைப்பம்புகளின் மின் இணைப்புகளை நிரந்தரமாக துண்டிப்பு செய்து, அங்கு அமைந்துள்ள தண்ணீர் தொட்டிகளின் கட்டைகளை இடித்து அப்புறப்படுத்தவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பயனற்று உபயோகத்தில் இல்லாமல் உள்ள சிறுமின் விசைப்பம்புகளின் மின் இணைப்புகளை துண்டிப்பு செய்ய தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு கடிதம் அனுப்பி மேல் நடவடிக்கை தொடரவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி பணிகளுக்கு ஆகும் செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண். 786 / 2021 / இ1 )**

## பொருள் எண் 22

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு சொந்தமான 6 மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளிலிருந்து குடிநீர் இந்நகரப் பொதுமக்களுக்கு குடிநீர் பகிர்மான குழாய்கள் மூலம் விநியோகம் செய்யப்படுகிறது. மேற்படி குடிநீர் விநியோகம் செய்யப்படும் சாலையினைவிட மேடான பகுதிகளில் சீரான முறையில் குடிநீர் விநியோகம் செய்ய இயலாத நிலையில், மேற்படி பகுதிகளில் புதியாக கேட்வால்வுகள், ஏர் வால்வுகள் மற்றும் இதர உபகரணங்கள் பொருத்தப்பட வேண்டியதும், பழுதடைந்த கேட்வால்வுகளை மாற்றி அமைக்கப்பட வேண்டியதும் மிகவும் அவசியமாகிறது. எனவே, மேற்படி பகுதிகளில் புதியதாக கேட்வால்வுகளை பொருத்திடவும், பழுதடைந்த கேட்வால்வுகளை மாற்றி அமைப்பதற்கும் தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ. 3,00,000/– (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்)க்கு மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சியின் வருவாய் / குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண். 787/ 2021 / இ1 )**

## பொருள் எண் – 23

கள்ளக்குறிச்சி நகராட்சிக்கு சொந்தமான தினசரி நாளங்காடியில் விநாயகர் கோவில் அருகில் உள்ள சாலையானது 30 அடிக்கும் மேல் உள்ளதால், மேற்படி சாலையில் தனி நபர்கள் ஆக்கிரமிப்பு செய்து தற்காலிக கடைகள் சாலையின் இருபுறமும் நடத்தி வருகிறார்கள். எனவே, மேற்படி ஆக்கிரமிப்புகளை பலமுறை அகற்றியும் மீண்டும் ஆக்கிரமித்து சாலையின் இருபுறமும் தற்காலிக கடைகள் அமைத்து வருகின்றனர். மேற்படி சாலையின் இருபுறமும் நகராட்சியின் வழியே தற்காலிக ஷெட்கள் அமைத்து தற்காலிக கடைகள் அமைக்க நகராட்சியின் மூலம் பொது ஏலம் விடப்பட்டால் நகராட்சியின் வருவாயை பெருக்கிட இயலும். எனவே, மேற்படி சாலையின் தற்காலிக கடைகள் அமைப்பதற்கு ஷெட் அமைப்பதற்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ. 9,50,000/– (ரூபாய் ஒன்பது இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்)–க்கு மன்றத்தின் நிர்வாக அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. தொகையினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**( ந.க.எண். 788 / 2021 / இ1 )**

**த□ அலுவல□**
**கள்ளக்குறிச்சி நகராட்சி**